**ஓஷன்வீவ் டிவொலொப்மன்ட் (தனியார்) கம்பனி - 2023**
--------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஓஷன்வீவ் டிவொலொப்மன்ட் (தனியார்) கம்பனியின் (“கம்பனி”) 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அலுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமத்துடன் தொடர்பும் இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் படி மீளாய்வாண்டின் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் ரூபா 1,256,262 தொகை எனினும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 4,187,538 தொகையென பதிவு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் ஆண்டிற்கான வருமான வரிச் செலவு ரூபா 2,931,276 தொகையினால் மிகைக் கணிப்பீடு ஏற்பட்டிருந்தது. | 2024 நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி இருக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 38 இன் பிரிவு 37 இற்கு இணங்க ரூபா 130 மில்லியனிற்கான நட்டஈட்டுத் தொகையொன்று கோரி கம்பனியொன்றினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்று தொடர்பாக எதிர்பாரா பொறுப்புக்காக வெளிப்படுத்தியிருக்கவில்லை. | இது தொடர்பாக பொழிப்பு குறிப்பொன்று அடுத்த நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி இருக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன சீராக்கல்களுக்கு முன்னர் செயற்பாட்டு தொழிற்பாடுகளின் காசுப் பாய்ச்சல் ரூபா 26,480,572 தொகை எனினும் நிறுவனம் அதனை ரூபா 21,147,340 தொகையென காட்டியிருந்தது. அதன் காரணமாக தொழிற்படு மூலதன சீராக்கல்களுக்கு முன்னர் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் காசுப் பாய்ச்சல் ரூபா 5,333,232 இனால் குறை கணிப்பீடு ஏற்பட்டிருந்தது. | அடுத்த நிதிக் கூற்று தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில் 01 - 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்திருக்காத கடன்பட்டோர் மீதி ரூபா 4,975,913 தொகையாக காணப்பட்டதுடன், 05 – 11 வருட காலம் கடந்திருந்த போதிலும், அறவீடு செய்யப்படாத | நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக சட்ட ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமையினால் நிலுவை வாடகை தொடர்பாக | விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன்பட்டோர் மீதி ரூபா 9,071,144 தொகையாகக் காணப்பட்டதுடன், கணக்காய்வு திகதியளவில் இந்த வதிவோர்கள் வாடகை வீடுகளிலிருந்து அகன்றிருந்ததுடன் ரூபா 1,385,526 தொகை அறவிடப்பட வேண்டிய குடியிருப்பாளர்களின் கோவைகளும் காணாமல் போயிருந்தது. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 4 வாடகை வீடுகள்/ தொழில் நிலையங்களில் தற்போது வதிவோரிடம் ரூபா 9,746,935 வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை பகுதிகளாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்த தடுத்து வைத்தல் வரி ரூபா 1,697,777 தொகை 10 வருடங்களை விட மிகையான மீதியாகக் காணப்பட்டதுடன், அந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவு செய்யாமையின் காரணத்தால் ஏற்பட்டிருந்ததாகும். பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் அடங்கியுள்ள ரூபா 2,628,407 இற்கான தடுத்து வைத்தல் தொகை மீதி 03 வருடங்களுக்கும் 09 இற்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்திருக்கவில்லை. மேலும் மத்தேகொட வீடமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,191,375 இற்கான தடுத்து வைத்தல் பணம் நிர்மாணவேலை பூர்த்தி செய்திருந்த போதிலும் 2014 ஆண்டு முதல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த தொகைக்காக சேவை வழங்குனரின் கோரிக்கையொன்று கிடைத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை காலரீதியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2013 ஆண்டு தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 910,840 தொகைக்கான பங்கிலாபமொன்று 10 வருட காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்திருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய தொகையொன்றிற்காக செலுத்த வேண்டிய தொகை தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் கம்பனிச் சட்டம் | | | |
| | (i) பிரிவு 223(2) | கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 2015 ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கம்பனிச் செயலாளர் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii) பிரிவு 206 | முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்காமல் பணிப்பாளர்களை அகற்றுதல் மற்றும் சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது கம்பனியின் நல்லெண்ணச் செயற்பாட்டிற்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் தொகுதி II அத்தியாயம் XLVIII இன் பிரிவு 21.1 | முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றிற்காக தீர்ப்பு சபையொன்றிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர் தாமதமின்றி அல்லது ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படுகின்ற காலப் பகுதியினுள் அல்லது குறிப்பிட்ட முறையான ஒழகாற்று விசாரணை நடாத்தி தாமதமின்றி விசாரணை அறிக்கை ஒழுக்காற்று அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியின் பெண் சட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைக்காக 2023 ஜனவரி 23 திகதி முதல் ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் 2024 பெப்ரவரி 28 திகதியளவிலும் விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று விரைவாக நடாத்தி அறிக்கை வழங்கும் படி பணிப்பாளர் சபை அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | தாபனக் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் பந்தி 7.7 | தாய் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை இணைந்த நிறுவனங்களின் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட வேண்டும். அதே போல் தாய் நிறுவனத்தினால் குறைந்த அளவு ஒரு காலாண்டிற்கு ஒருமுறையேனும் இணைந்த கம்பனிகளின் தொழிற்பாடுகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முதலீட்டிற்கு ஏற்றவாறு நலன்கள் பெற்றுக் கொடுப்பதென உறுதிப்படுத்த வேண்டும். எனினும் கம்பனியின் தாய் நிறுவனத்தினால் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டுக் கைநூலில் பந்தி 3.1 | கம்பனியினால் தமது நிறுவனத்திற்கு பொருத்தமான விதத்தில் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைக் கோவை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | விஷேட அல்லது பொது சட்டமொன்றின் மூலம் நிருவப்படுகின்ற நியதிச் சட்ட சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான கம்பனிகளுக்கு மாத்திரம் செயற்பாட்டுக் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பொருந்துகின்றது. | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திடம் வினவி அதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 265,199,028 இற்கான இலாபமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 409,564,924 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 204,365,896 இற்கான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு ஏனைய வருமானங்கள் குறைவடைதல் காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் 2022 ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 204.36 மில்லியனினால் குறைவடைந்திருந்தது. அதற்காக முதலீட்டு ஆதனங்களின் (பம்பலபிட்டிய மாடிவீடமைப்பு கட்டிடத் தொகுதி) நியாயமான பெறுமதி ரூபா 202.05 மில்லியன் தொகை குறைவாக மதிப்பீடு செய்திருத்தல் காரணமாக இருந்த போதிலும் கட்டிடத்திலிருந்து கிடைக்கும் வாடகை வருமானம் ரூபா 12.65 மில்லியனினால் அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நிருவாகச் செலவு ரூபா 6.92 மில்லியனினால் அதிகரித்திருந்ததுடன் இந்த அதிகரிப்பிற்கு ரூபா 6.8 மில்லியனினால் பயன்பாட்டுச் செலவுகள் அதிகரித்தல் காரணமாக இருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கம்பனியின் நடைமுறைச் சொத்து விகிதாசாரம் 2.4:1 ஆகக் காணப்பட்டதுடன், திடீர் சொத்து விகிதாசாரம் 1:1 ஆகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டுடன் இந்த விகிதாசாரம் முறையே 2.4:1 தொகை மற்றும் 0.85:1 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் 2019 ஆண்டின் போது பார்க் ரோட் கட்டிடத்தின் 21 கடையறைகள் ரூபா 70,025,000 தொகைக்கு மேன் லேன்ட் க்ளோபல் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கொள்வனவாளர்களிடம் ரூபா 20,025,000 | பார்க் ரோட் கடையறைகள் மூடுவதற்கான காரணம் அது தொடர்பாக காணப்படும் இலக்கம் CA/WR/540/19 மற்றும் DSP/519/22 ஆகிய வழக்குகளே ஆகும். | இணக்கப்பாட்டு ஒன்றிற்கு வந்து இணக்கமொன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இற்கான தொகை கிடைக்க வேண்டியிருந்தது. அந்தக் கடையறைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருத்தல் மற்றும் தேவையான மின்சார மற்றும் நீர் வழங்கியிருக்காமை காரணமாக கடையறையை பயன்படுத்த முடியாமையால் கொள்வனவு செய்வோரினால் ரூபா 130 மில்லியனுக்கான நட்டஈடொன்று கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கம்பனிக்கு எதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்த. அதே போல் 2005 ஆண்டில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த இந்த 21 கடையறைகளும் கணக்காய்வுத் திகதியாகிய 2024 பெப்ரவரி 28 திகதி வரை 19 வருடங்கள் மூடப்பட்டிருத்தல் வினைத்திறனற்ற முகாமைத்துவத் தீர்மானங்களின் விளைவு என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 09 வீட்டு அலகுகளின் உடன்படிக்கைகள் இரத்து செய்யப்பட்டு 10 மாதம் முதல் 6 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கைகளுக்கு அணுகாமல் வாடகை வீட்டு உரிமையாளர்கள் வசித்து வருகின்றார்கள் என அவதானிக்கப்பட்டது. | 06 வீடுகளுக்காக உடன்படிக்கை பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளது. 2 வீடுகளுக்காக வாடகைக் காலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு தேவையான சட்ட மற்றும் முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. | உடன்படிக்கை மேற்கொள்ளல் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓஷன் வீவ் போடியம் கட்டிடத்தின் முதற் கட்டத்திற்காக முதலீட்டாளர்களிடம் பெற்றிருந்த திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புத் தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 9,125,000 தொகை 04 வருடங்களுக்கும் 08 இற்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்திருக்கவில்லை. இந்த நிர்மாண வேலைக்காக தகைமையுடைய முதலீட்டாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்காததுடன் அந்த நிர்மாணவேலை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது எதிர்காலத்தில் முதலீட்டாளர்களை தெரிவு செய்வதற்காகவே எனினும் 2015 இன் பின்னர் பிரதான முதலீட்டுச் செயற்திட்டங்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வைப்புத் தொகைகளை தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 05 – C வீட்டு அலகின் பெண் வதிவாளர் 2009 ஆண்டு முதல் வீட்டில் வசித்து வந்த போதிலும் 2018 ஆண்டு ஒக்தோபர் மாதத்தின் பின்னர் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் வீட்டு அலகிற்காக ரூபா 26,580 தொகை போன்ற குறைந்த வாடகையொன்று அறவீடு செய்வதுடன் ஏனைய வாடகை வீட்டாளர்களிடம் போன்று வருடாந்த வாடகை அதிகரிப்பொன்று மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் 2023 ஒக்தோபர் 26 திகதிய பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் அதன் தீர்மான இலக்கம் 261-05 இன் படி மாதாந்த வாடகைத் தொகை மாற்றம் செய்யாது ரூபா 26,580 தொகை மற்றும் சேவைக் கட்டணமென ரூபா 7,500 தொகையாக 2024 ஜனவரி 01 திகதி முதல் இரண்டு வருடங்களுக்கு உடன்படிக்கை மேற்கொள்வதற்கு வதிவோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டு அலகின் மாதாந்த வாடகை பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 240,086 தொகையாகக் காணப்பட்டதுடன், உடன்படிக்கை மேற்கொண்டிருந்த வாடகை ரூபா 26,580 ஆகும். இதன் காரணமாக உடன்படிக்கை மேற்கொண்ட இரண்டு வருடங்களுக்காக கம்பனி இழந்துள்ள வாடகை வருமானம் ரூபா 5,124,144 தொகையென அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் தீர்மானித்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | முறைப் பிரகாரம் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | நுவரெலிய, மாலிகாவத்த, தெல்கந்த, கேகாலை வலவ்வத்த மற்றும் கேகாலை சியம்பலாபிடிய ஆகிய 05 வீடமைப்பு செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக கம்பனி 2022 ஆண்டின் ரூபா 39.5 மில்லியன் ஒதுக்கப்பட்டு அந்த ஆண்டு ரூபா 1,012,411 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு அந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்காததுடன், தெல்கந்த செயற்திட்டத்திற்காக ரூபா 6,650 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் படி முன்னைய ஆண்டில் நிறைவேற்ற முடியாமல் போன செயற்திட்டங்களை எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்காக நீண்டகால வேலைத் திட்டமொன்றின்றி கம்பனி செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்காக இவ்வாறான செலவுகள் மேற்கொள்ளல் பலவீன முகாமைத்துவத் தீர்மானங்கள் என அவதானிக்கப்பட்டது. | நுவரெலிய மற்றும் மாலிகாவத்த செயற்திட்டங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. தெல்கந்த காணி காணப்படும் நிலைமையிலே விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வளவ்வத்த மற்றும் சியம்பலாப்பிட்டிய செயற்திட்டங்களில் ஆரம்ப பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் காணிகளின் சிக்கலற்ற தன்மை உரிய முறையில் காணப்படாமையால் செயற்திட்டங்களை மேற்கொள்ளல் முடியாமல் காணப்படுகின்றது. | செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்னர் காணிகளின் சிக்கலற்ற தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 194,285 தொகையாகிய 07-C வீட்டு அலகு மற்றும் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 249,320 தொகைக்கான 01-A வீட்டு அலகுக்காக 2023 ஜூலை 31 திகதி பணிப்பாளர் சபைப் பத்திரத்தின் தீர்மான இலக்கம் 257-04 படி வருடாந்த வாடகை அதிகரிப்பொன்றின்றி 05 வருடங்களுக்காக மாதாந்த வாடகைகள் மற்றும் சேவைக் கட்டணம் என ரூபா 90,000 அறவீடு செய்வதற்கு உடன்படிக்கை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. நிறுவனத்தின் வழமையான செய்முறையாகிய வருடாந்தம் வாடகை 5 சதவீதத்தினால் அதிகரித்தல் ஆக இருந்த போதிலும் இந்த நபர்களுக்கு 05 வருட காலத்திற்காக வருடாந்த கட்டண அதிகரிப்பொன்று மேற்கொள்ளப்படமாட்டாது. அதன் படி கம்பனிக்கு சேகரிக்கக் கூடிய ரூபா 17,478,984 இற்கான வருமானம் ஒன்றினை இழக்குகின்றன என அவதானிக்கப்பட்டது. | வீட்டுவாசிகளின் அடிப்படை உரிமை வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு பின்னர் அகற்றுவற்கு இணக்கியிருந்தமையால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்திற்கு பாதகம் ஏற்படாத வகையில் வருடாந்த வாடகை அதிகரிக்கப்பட்ட வேண்டும். |
| (உ) | 07-B மற்றும் 09-D வீட்டு அலகுகளில் வாடகைக்கு இருக்கும் தனியார் கம்பனியின் 2023 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகைத் தொகை ரூபா 8,439,706 ஆகும். இந்த நிலுவைத் தொகையினை சமமான 36 தவணைகளில் செலுத்துவதற்கு 3.1.1–001239-250-07 இலக்கங் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்திருந்தது. 07-B அலகுக்காக தவணையொன்று ரூபா 29,463 வீதமும் 09-D வீட்டலகு ஒன்றிற்காக தவணையொன்று ரூபா 204,972 தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மீதிகளை பரிசோதனை செய்த போது 07-B வீட்டு அலகுக்காக பெற வேண்டிய மீதியாகிய ரூபா 1,060,697 தொகை அவ்வாறே காணப்பட்டதுடன் 09-D அலகிற்காக இணங்கியிருந்த ரூபா 204,972 வீதமான தவணைத் தொகையும் இணங்கியிருந்தவாறு கொடுப்பனவு மேற்கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | நிலுவைத் தொகையை பகுதிகளாக செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. | நிறுவனத்திற்கு பாதகம் ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும். |